செ.வெ.எண்:71 நாள்:24.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கல்குவாரிகள் ஏலம் மூலம் தமிழக அரசுக்கு ரூ.38,69,250 வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

-----

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள கல்குவாரிகளின் ஏலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.08.2016) நடைபெற்றது.

இந்த கல்குவாரிகளின் ஏலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:-

தமிழக அரசின் புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் மூலம் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள கல்குவாரிகளின் ஏலம் நடைபெறும். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள கல்குவாரிகளில் இருந்து கட்டிடம் மற்றும் சாலை அமைத்தலில் உபயோகிக்ககூடிய சாதாரண பொது வகை உபயோக சிறு கனிம வகையிலான அரளை, ஜல்லி, சக்கைக்கல், குண்டுக்கல் போன்ற கனிமங்களை குவாரிசெய்து எடுத்துச் செல்ல டெண்டர் மற்றும் ஏலம் மூலம் குத்தகை உரிமம் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்க மறுஏலம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில் நமது மாவட்டத்தில் உள்ள 41 கல்குவாரிகள் ஏலம் விடப்பட்டதில் துளையானூர், ஆதனூர், சித்தன்னவாசல் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள 5 அரசு புறம்போக்கு கல்குவாரிகள் ஒப்பந்தகாரர்களால் ஏலம் எடுக்கப்பட்டு முடிவுற்றது. இதன் மூலம் தமிழக அரசுக்கு ரூ.38,69,250 வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. மீதமுள்ள 36 கல்குவாரிகளின் மறுஏலம் குறித்த தேதி பின்னர் அறிவிக்கப்பட்டு ஏலம் விட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஏலத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் திரு. பன்னீர்செல்வம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**